# விலாங்கு மீன்



இதோ பாருங்கள் நீளனை! அவன் நீளமான உடலும், அழகான புள்ளிகளும் உடைய ஒரு விலாங்கு மீன் (spotted eel). ஒரு வகை மீன்

அவன் பாறை இடுக்குகளில் ஒளிந்து விளையாடுவது அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அவன் உடம்பு வளைந்து நெளிந்து போறதைப் பார்க்கவே அழகா இருக்கும்! அதற்குத் துடுப்புகள் கிடையாது.





www.worldtamilacademy.com

# நத்தை



கூட்டுக்காரனைப் பாருங்கள்!

தன் கூட்டைச் சுமந்து

செல்வான். அவன் ஒரு

மெல்லுடலி. அவன் தான்

நத்தை (snail). அவன் தன்

வீட்டையே தன்னோடு எடுத்துச்

செல்கிறான்.

ஆபத்து வந்தா உடனே

கூட்டுக்குள் ஒளிஞ்சுக்குவான்!

சில கடல் நத்தைகள் மற்ற

மெல்லுடலிகளின் ஓடுகளைத்

துளைத்து அவற்றை உண்ண

முடியும்.



# டால்பின்



தோழன் தான் எங்கள் நீலக்கடலின் வேகமான நீச்சல் வீரர் ! அவன் ஒரு பாலூட்டி. அவன் பெயர் டால்பின் (dolphin). அவன் எங்களை விளையாட அழைப்பான்.

அவனோடு நீந்தினால் ரொம்பவும் சந்தோஷமா இருக்கும் ! இவைகள் எதிரொலி மூலம் தங்கள் சுற்றுப்புறத்தைப் பார்க்க முடியும். ஒலி எழுப்பி எதிரொலிகளைக் கேட்கின்றன.



# வாள் மீன்



அதோ பாருங்க வால்வீரனை! நீண்ட மூக்குடன் இருப்பான். அவன் பெயர் வாள் மீன் (sword fish). அவனும் ஒரு வகை மீன் தான். அவனோட மூக்கு நீளமான வாள் மாதிரி இருக்கும்.

அதை வச்சுக்கிட்டு வேகமா நீந்தி வருவான்! இதனின் வாள் உண்மையில் அதன் நீளமான மேல் தாடை ஆகும். அது இரையைத் தாக்கவும், தற்காப்பிற்காகவும் பயன்படுகிறது.



# கடல் குதிரை



குதிரைவாலைப் பாத்தீங்களா? அவன் ஒரு விசித்திரமான மீன். அவன் பெயர் தான் கடல் குதிரை (sea horse). அவன் ஒரு குட்டிக் குதிரை மாதிரி இருப்பான்!

தன்னோட வால வச்சு பவளக்கொடியப் பிடிச்சுக்குவான்! ஆண் கடல் குதிரைகள் தங்கள் வயிற்றில் உள்ள பையில் முட்டைகளை அடைகாக்கும்!





www.worldtamilacademy.com